சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R.பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25-ம் நாள் சனிக்கிழமை

இடைமனு எண்.8/2025

இன்

அசல் வழக்கு எண்.68/2013

....

1) இராம.காசி

2) க.பாலமுருகன்

3) சு.மலர்வேணி ....மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

1. தலைவர்

M/S. சாம்பவிகா கல்வி அறக்கட்டளை, சிவகங்கை

மற்றும் 6 நபர்கள்.

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 15.10.2025-ம் தேதியன்று வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எஸ்.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.L.சரவணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

## உத்தரவு

இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை மனுதாரர்/2ம் வாதி தரப்பு வழக்குரையில் தாக்கல் செய்த சமயத்தில் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யாததை மன்னித்து இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை மனுதாரர்/2ம் வாதி தரப்பு கூடுதல் ஆவணங்களாக ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் தரப்பில் கட்டளை 8, விதி 14(2)-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>

இந்த மனுவுடன் மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்களாக தாவா சாம்பவிகா கல்வி அறக்கட்டளை சம்மந்தமான 15.05.2001 மற்றும் 16.03.2005 ஆகிய தேதிகளில் RECTIFICATION பத்திரங்கள் மற்றும் 31.05.2006 மற்றும் 12.06.2006 தேதிகளில் அறக்கட்டளை திருத்தல் பத்திரங்கள் ஆகியவற்றின் அசல் ஆவணங்கள் 1 முதல் 7 நபர்களின் வசம் இருப்பதால் அவற்றின் ஜெராக்ஸ் நகலின் தனது பைலில் இருந்து எடுத்து தாக்கல் செய்ய வேண்டியிருந்தது. மேலும் தாவா வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில் தாவா அறக்கட்டளையில் புதிய உறுப்பினர்களை பிரதிவாதிகள் தன்னிச்சையாக சேர்த்து பதிவுசெய்த ஆவணத்தை ரத்து செய்யுமாறு சிவகங்கை மாவட்டப்பதிவாளர் மனுச் செய்து அதில் வழங்கப்பட்ட செயல்முறை ஆணை மற்றும் தாவா வழக்கில் IA. 409/2013 ல் ஏற்பட்ட உத்தரவுக்கு எதிராக சிவகங்கை மாவட்ட நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த CMA.4/2014 ல் ஏற்பட்ட உத்தரவு அதன் பேரில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் CRP களில் ஏற்பட்ட உத்தரவுகளும், தாவா அறக்கட்டளையில் வரவு செலவுகளில் ஏற்பட்ட முறைகேடுகள் சம்மந்தமாக 4-ம் பிரதிவாதி மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யக்கோரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் டைரக்ஷன் பெற்றது, அதன் பேரில் 4 -ம் பிரதிவாதிக்கு எதிராக காவல்துறை பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் அதில்6 4 ஆம் பிரதிவாதியின் முன் ஜாமீன் மனுக்களில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள், தாவா வழக்கில் மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்களாக தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. மேற்படி ஆவணங்கள் தாவா வழக்கில் மனுதாரர்கள் தரப்பு வழக்கை ருசுப்படுத்த மிகவும் அவசியமான ஆவணங்கள் ஆக இருக்கிறது. அதனையும் காலதாமதமாக தாக்கல் செய்யும் கால தாமத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவாணங்களாக குறியீடு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. அவ்வாறு செய்யாவிடில் மனுதாரர்கள் தரப்புக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம் ஏற்படக் கூடும். எனவே மேற்படி மனுவை ஏற்று உத்தரவிட வேண்டும்.

3) 4**ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்.**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள தாவா மனுவில் குறிப்பிட்டுள்ள சில விஷயங்கள் பொய்யானது மற்றும் தவறானவை ஆகும். தாவா வழக்கில் ஏற்கனவே 1ம் வாதி விசாரிக்கப்பட்டு மேற்படியார் மூலமாக 1 முதல் 9 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மீண்டும் 2ம் வாதியை விசாரிக்க வேண்டும் என்றும், மேற்படியார் மூலமாக 13 ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டும் என்றும் மனுதாரர் கோருவது சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. தாவா மனுவில் குறிப்பிட்டுள்ள 13 ஆவணங்களின் அசல்களையோ அல்லது சான்றிட்ட நகல்களையோ குறியீடு செய்ய கோராமல் வெறும் நகல்களை குறியீடு செய்ய கோருவது சட்டப்படி தவறானது ஆகும். மேலும் மேற்கண்ட ஆவணங்களின் அசல்கள் அல்லது சான்றிட்ட நகல்களை ஏன் தாக்கல் செய்யப்படவில்லை என்ற விபரங்கள் ஏதும் தாவா மனுவில் குறிப்பிடவில்லை. மேலும் மேற்கண்ட நகல்களை குறியீடு செய்யப்பட்டால் அவற்றின் உண்மைத் தன்மை, செல்லும் தன்மை ஆகியன கேள்விக்குறியான நிலை ஏற்படும். கடந்த 13 வருடங்களாக தாவா வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வரும் நிலையில் 2001ம் வருடத்திலிருந்து 2024ம் வருடம் வரை உள்ள ஆவணங்களின் நகல்களை சரியான விளக்கங்கள் இன்றி குறியீடு செய்ய கோருவது முற்றிலும் சட்டத்திற்கு எதிரானது ஆகும். மேற்கண்ட 13 ஆவணங்கள் கடந்த பல வருடங்களாக யார் வசம் இருந்தது, எப்போது கிடைத்தது போன்ற கூற்றுகளை குறிப்பிடப்படாமல் தாவா மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா மனுவும் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யத்தக்கதாய் உள்ளது. எனவே, தாவா மனுவினை அனுமதித்தால் 65 வயதாகும் 4ம் எதிர்மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டு விடும். எனவே மனுதாரர்களின் மனுவை எதிர்மனுதாரர்கள் தரப்பு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

**5**. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

**6**. தாவா அசல் வழக்கில் ஏற்கனவே 1ம் வாதி விசாரிக்கப்பட்டு மேற்படியார் மூலமாக 1 முதல் 9 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மீண்டும் 2-ம் வாதியை விசாரிக்க வேண்டும் என்றும் மேற்படியார் மூலமாக 13 ஆவணங்கள் குறியீடு செய்யவேண்டும் என்றும் மனுதாரர் கோருவது சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என 4ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணை ஏற்புடையதாக இல்லை. ஏனெனில் வாதிகள் தங்களது வழக்கு சங்கதியை உரிய சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் நிரூபித்திட உரிமை கொண்டுள்ளதால், மேற்படி ஆட்சேபணை ஏற்கும்படி இல்லை.

**7**. தாவா மனுவில் தாக்கல் செய்யவேண்டி குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் நகல்களாக உள்ளது என்றும், மேற்படி ஆவணங்களின் அசலையோ, நகலையோ ஏன் தாக்கல் செய்திடவில்லை என்ற விபரம் மனுவில் குறிப்பிடப்படவில்லை என 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்து குறித்து தாவா மனுவினை பரிசீலனை செய்ததில் அதில் மனு அபிடவிட்டு பாரா 3-ல் தாவா சாம்பவிகா கல்வி அறக்கட்டளை சம்மந்தமான 15.05.2001 மற்றும் 16.03.2005 ஆகிய தேதிகளில் Rectification பத்திரங்கள் மற்றும் 31.05.2006 மற்றும் 12.06.2006 தேதிகளில் அறக்கட்டளை திருத்தல் பத்திரங்கள் ஆகியவற்றின் அசல் ஆவணங்கள் 1 முதல் 7 நபர்கள் வசம் உள்ளதாக சங்கதி குறிப்பிடப்பட்டுள்ளதை பார்க்கையில் மேற்படி ஆவணங்களின் ஜெராக்ஸ் நகல் மட்டுமே மனுதாரர் வசம் இருந்து தாக்கல் செய்யப்படுவதாக குறிப்பிட்டுள்ள சங்கதி ஏற்கும்படி உள்ளது. மனு பட்டியலில் குறிப்பிட்ட 6 முதல் 13 வரையிலான ஆவணங்கள் நீதிமன்ற உத்தரவுகள் என்பதால் அவற்றின் சான்று நகல் பெற்று தாக்கல் செய்திட இயலும். எனவே மேற்சொன்ன மனு பட்டியலில் குறிப்பிட்ட 6 முதல் 13 வரையிலான ஆவணங்களைப் பொறுத்து தாவா மனு தள்ளுபடி செய்தும் 1 முதல் 5 வரையிலான ஆவணங்களை Subject to proof and relevancy என்ற நிலையில் குறியீடு செய்திட அனுமதித்திட இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக தாவா மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.10.25 14:40:55 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள்

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம் - இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.10.25 14:40:58 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court,
Sivagangai
I.A.No.8/2025 in
O.S.No.68/2013
**Draft/Fair/Order**
25.10.2025